ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2458/29 - 2025 ඔක්තෝබර් මස 14 වැනි අඟහරුවාදා - 2025.10.14

2458/29 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KDS/TUM/04/1/6/1/3/68.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4 -3/7/2021/HW/384

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் திருத்தச் சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் தும்பனே பிரதேச செயலாளர் பிரிவில் இல. 301, கலகெதர மேற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள கலகெதர கிராமத்தில் அமைந்துள்ள கண்டி மாவட்ட நில அளவையாளர் அதிபதி சார்பாக நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடத்திரல் வரைபட இல. 321271, தொகுதி இல. 01, தாள் இல. 2 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: பல்லேகேவத்த; விபரம்: திறந்த நிலம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: டபிள்யூ. யூ. எஸ். டபிள்யூ. கே. விஜேரத்ன; விஸ்தீரணம்: 0.0044 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தும்பனே பிரதேச செயலாளர்



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர். எம். எஸ். என். ரத்நாயக்க,
பிரதேச செயலாளர்,
தும்பனே.

பிரதேச செயலகம்,
தும்பனே,
2025, செத்தெம்பர் 29.

EOG 10 - 0153